# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை
## 1990-91

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை

1990—91

115—29

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்.

ஆண்டறிக்கை 1990— 91.

பொருளடக்கம்.


| வரிசை எண். | பொருள். | பக்கம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | செயல்களும் கடமைகளும் .. .. .. .. .. | 1 |
| 2 | நேரடித் தேர்வுகள் .. .. .. .. .. .. | 1–4 |
| 3 | தேர்வாணையத்தின் அமர்வுகள் .. .. .. | 5 |
| 4 | பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள் மனுக்கள், சட்ட முறை ஒழுங்கு முறை விதிகள், தற்காலிக நியமனங்கள், விதி தளர்த்தல் முதலியன. .. .. .. .. | 5–7 |
| 5 | தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் .. | 8 |
| 6 | சீர்த்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள். .. .. | 9–10 |
| 7 | அரசும் தேர்வாணையமும் .. .. .. .. .. | 11–19 |


பின் இணைப்புகள்.


| | | |
|---|---|---|
| 1 | தேர்வாணையத்தின் பணியாளர் பட்டியல் .. .. .. | 20 |
| 2 | நேரடித் தேர்வு வெளியிடப்பட்ட முடிவுகள் புள்ளி விவரம் .. | 21–23 |
| 3 | வருவாய் மற்றும் செலவு .. .. .. .. .. | 25 |
| 4 | வெளியான அறிவிக்கை விளம்பரங்கள் .. .. .. | 26–28 |
| 5 | எழுத்துத் தேர்வு விவரம் .. .. .. .. .. | 29–30 |
| 6 | பொருத்தமும், தகுதியும் உடைய வேட்பாளர்கள் இல்லாத பணிகள் குறித்த விவரம் .. .. .. .. | 31 |
| 7 | பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்ட பதவிகள் .. .. .. .. | 32–33 |
| 8 | ஒழுங்கு நடவடிக்கைகள், மனுக்கள் மற்றும் முறையீடுகள் விவரம் .. .. .. .. .. | 34–35 |
| 9 | தேர்வாணையத்தின் ஒழுங்கு முறைவிதி 1954 விதி 10 (பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் முறைப்படுத்தியதின் விவரம் | 36–37 |
| 10 | தற்காலிக நியமனங்கள் மாநிலப் பணி/சார்நிலைப் பணி/அமைச்சுப் பணிகள், 24 மாதங்களுக்கு மேல் இசைவு அளித்த விவரம் .. .. .. .. .. .. | 38-40 |
| 11 | அரசுத் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்கப்படாதவை குறித்து கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான புள்ளி விவரம் .. | 41 |

## ஆண்டறிக்கை 1990—91 ஆம் ஆண்டு.

**முன்னுரை.**—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசியலமைப்பு பிரிவு 315இன் படி அமைக்கப்பட்டுள்ளது. தற்போது தேர்வாணையத்தில் தலைவர் ஒருவர், 11 உறுப்பினர்கள் உள்ளனர்.

தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. தி. இலட்சுமிநாராயணன், இ.ஆ.ப. (ஓய்வு) .. .. தலைவர்

திரு. எம். எஸ். அப்துல்காதர், பி.எஸ். சி. .. .. .. உறுப்பினர்
(10—8—90 பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்)

திரு. ஓ. அ. கனகசபை, பி.ஏ., பி. டி. பி. எல்,. .. .. .. உறுப்பினர்
(29—6—90 பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்)

திரு. பொ. இல. பொன்னுச்சாமி, இ.ஆ. ப. (ஓய்வு) .. உறுப்பினர்

திரு. யு.எஸ். நடராஜன், இ. ஆ.ப., (ஓய்வு) .. .. .. உறுப்பினர்

திரு. சு. நாகேஸ்வரன், பி. இ. (சிவில்) எப். ஐ. ஈ. .. .. உறுப்பினர்

திரு. கா. பொன்னுசாமி, இ.ஆ.ப., (ஓய்வு) .. .. .. உறுப்பினர்

திரு. இ. செ. சண்முகம், எம். பி.பி.எஸ்., டி.பி.எச்.ஓய். எஸ். எம்.எட் (லண்டன்) டி. ஆர்த்தோ, எப்.எம்.எம்.சி. .. .. உறுப்பினர்

திரு. ஜெ. இராமலிங்கம், பி.இ. .. .. .. .. உறுப்பினர்

திரு. வி. குருமூர்த்தி, பி.இ., எப்.ஐ.ஈ. .. .. .. .. உறுப்பினர்

திரு. த. பாலகிருஷ்ணன், பி.ஏ.பி.எல். .. .. .. .. உறுப்பினர்

திரு. எஸ். ஹமீது, எம். ஏ. .. .. .. .. .. உறுப்பினர்
(24—10—90 முற்பகல் பணியேற்றார்)

திரு. ஜி. செல்வ கணபதி, எம். ஏ., .. .. .. .. உறுப்பினர்
(27—11—90 முற்பகல் பணியேற்றார்)

திருமதி கே. நாயகம், எம். ஏ. எம்.பில். .. .. .. .. உறுப்பினர்
(5—12—90 முற்பகல் பணியேற்றார்)

திரு. கு. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., 21—3—91 பிற்பகல் வரை தேர்வாணைய செயலராக பணியிலிருந்தார்.

திரு. வே. குணாளன், இ.ஆ.ப. தேர்வுக்கட்டுப்பாடு அலுவலராக 13—5—1990 வரை பணியைத் தொடர்ந்தார். 11—6—1990 முதல் திரு. ஜெகன்மோகன் சிங் ராஜ், இ.ஆ.ப. தேர்வுக் கட்டுப்பாடு அலுவலராக பொறுப்பேற்றார்.

மார்ச் 31, 1991-ன் நிலையில் தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பின் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

செயல்களும் கடமைகளும். தேர்வாணையம் செய்ய வேண்டிய பணிகள் இந்திய அரசியலமைப்பு 320 பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர் தேர்வாணையம நேரடித் தேர்வு முறையில மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணி பணியிடங்களை நிரப்புதல் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு பணி மாற்றம் செய்தல் மற்றும் பதவி உயர்வு அளித்தல், ஒழுங்கு நடவடிக்கை, அரசு ஊழியர் மீது தொடுக்கப்பட்ட சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்புப் பெற ஏற்பட்ட செலவினங்களை கோருதல், பணி காலத்தில் பணியாளருக்கு ஏற்பட்ட தீங்குகளுக்காக ஓய்வூதியம் அளிப்பு குறித்த கோரிக்கை. முதலியவற்றில் கலந்தாலோசிக்கப்பட வேண்டும். சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் அரசுப் பணியில் உள்ள ஊழியர்களுக்காக நடத்தப்படுகிறது. இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக, டேராடூனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரியில் சேருவதற்கான தேர்வையும் நடத்துகிறது.

வேலைப்பளு : அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப் பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 1. நேரடித் தேர்வுகள்.

(1) முதல் நிலைத் தேர்வு :

| | |
|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. .. | 7 |
| காலியிடங்களின் எண்ணிக்கை .. .. .. | 148 |
| பெறப்பட்ட விண்ணப்பங்கள .. .. .. .. | 1,46,732 |
| பரிந்துரை செய்யப்பட்டவர்கள் .. .. .. | 1,480 |

(2) இறுதி நிலை எழுத்துத் தேர்வு :

| | |
|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. .. | 26 |
| காலியிடங்களின் எண்ணிக்கை .. .. .. .. | 1,528 |
| அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. | 15,297 |
| பரிந்துரை செய்யப்பட்டவர்கள் .. .. .. | 3,036 |

(3) நேர்முகத் தேர்வு :

| | |
|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை .. .. .. .. | 39 |
| காலியிடங்களின் எண்ணிக்கை.. .. .. .. .. | 1,142 |
| அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. .. | 4,239 |
| பரிந்துரை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை .. .. | 908 |

## 2. மற்ற தேர்வுகள் :

(1) சிறப்புத் தேர்வு : 1990.

| | மே. | நவம்பர். |
|---|---|---|
| விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை .. | 20,605 | 18,141 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை .. | 10,928 | 11,617 |

(2) துறைத் தேர்வு :

| | | |
|---|---|---|
| விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை .. | 27,570 | 27,223 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை .. | 14,422 | 10,495 |

3. அரையாண்டுத் தேர்வுகள் :

(i) விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை .. 95

(ii) வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை 95

3. கல்வித் தகுதி/வயது/முதலியவற்றில் விதி தளர்த்தியது 99 நேர்வுகள்

4. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவுசெய்தல் 735 நபர்கள்.

5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல். 289 நபர்கள்.

6. ஒழுங்கு நடவடிக்கை:

ஆணையத்தின் கருத்து தெரிவித்த வழக்குகள் 332

7. ஒழுங்குமுறை விதி 16 (பி) பிற்பகுதியின் கீழ் நியமனங்கள் 551 தேர்வுகள் செய்தவை.

8. வரவு மற்றும் செலவு : (ரூபாய் ஆயிரங்களில்)

| | |
|---|---|
| வரவு .. .. .. .. .. .. .. | 70,25 |
| செலவு .. .. .. .. .. | 2,70,41 |

(வரவு செலவு விவரங்கள் பின் இணைப்பு-3-ல் கொடுக்கப்பட்டுள்ளது).

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தின் பல்வேறு பணிகளில் 44 பதவிகளுக்கு 1,068 காலியிடங்களுக்கு விண்ணப்பங்களைக் கோரி 36 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. இவ்வாறு வெளியிடப்பட்ட 44 பதவிகளுக்கான அறிவிக்கை பட்டியல் காலியிட எண்ணிக்கையுடன் பின் இணைப்பு-4-ல் தரப்பட்டுள்ளது.

சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள். :

தேர்வாணையம், தெரிவு முறைகளில் மற்ற அமைப்புகளைப்போல் புதிய முறைகளைப் பயன்படுத்தவும் வேண்டிய மாற்றங்களை செய்யவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பகுதி - 2.

**நேரடித் தேர்வுகள் :** 32 பதவிகளில் அறிக்கைக்குரிய ஆண்டில் 908 பணியிடங்களை நிரப்ப வேட்பாளர்களை தெரிவு செய்தது. மேற்கண்ட 908 பணியிடங்களுக்கு 13,658 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. 7,517 நபர்கள் இறுதி நிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 1,984 நபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். இறுதியில் 908 வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

நுட்பம் சார் பணிகளில் முக்கிய பதவிகளின் தெரிவு விவரம்.

| வரிசை எண். | பதவியின் பெயர். | காலியிடங்களின் எண்ணிக்கை. | தெரிவு செய்த நபர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | உதவிப் பொறியாளர் (மின்னியல்) .. .. | 42 | 38 |
| 2 | தோட்டக்கலை அலுவலர் .. .. | 40 | 40 |
| 3 | உதவி ஆய்வாளர் தொழிற்சாலைகள் | 28 | 28 |
| 4 | வேளாண்மை அலுவலர் (ஆராய்ச்சி).. .. | 82 | 82 |
| 5 | உதவி மருத்துவர் .. .. | 588 | 588 |
| 6 | உதவிப் பொறியாளர் (சிவில்) .. | 60 | 47 |

குறிப்பு : [4 ஆதி/பழங்குடியினருக்கான காலியிடம் உதவிப் பொறியாளர் (மின்னியல்) பதவிக்கு கல்வித் தகுதி உடைய வேட்பாளர் கிடைக்கவில்லை] தெரிவு நடந்து முடிந்த 32 பதவிகளுக்கான புள்ளி விவரம் பின் இணைப்பு -2 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பம் சார் பணிகளின் தெரிவு முறைகள்.

**உதவி கால்நடை மருத்துவர் :** 200 காலியிடங்களுக்கு 9—7—1990 அன்று தேர்வாணையம் அறிவிக்கை விளம்பரம் வெளியிட்டது. 234 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு ஜூலை மாதம் நடைபெற உள்ளது.

**உதவி மருத்துவர் :** தேர்வாணையம் 575 காலியிடங்களுக்கு 29-11-1990 அன்று அறிவிக்கை விளம்பரம் வெளியிட்டது. 5,208 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இறுதி எழுத்துத் தேர்வு 31-3-1991 அன்று நடத்தப்பட்டது.

**மாவட்ட உரிமையியல் நீதிபதி :** தேர்வாணையம் 83 காலியிடங்களுக்கு 5—11—1990 அன்று அறிவிக்கை விளம்பரம் வெளியிட்டது. 2,051 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. நேர்முகத் தேர்வு 7-3-1991 முதல் 20-4-1991 வரை நடந்தது. 83 நபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தொகுதி பணிகள்.

**தொகுதி 1. பணிகள்**— தொகுதி-1, பணியில் 550 விண்ணப்பதாரர்கள் இறுதி நிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். எழுத்துத் தேர்வு 6—10—1990 முதல் 11—10—1990 வரை நடந்தது. எழுத்துத் தேர்வின் அடிப்படையில் 104 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். 25—4—1991 முதல் 29—4—1991 வரை வாய்மொழித் தேர்வு நடத்தப் பெற்றது.

தேர்வாணைய தொகுதி-1 பணியில் துணை ஆட்சியர் பதவிக்கு ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கான தனி ஒதுக்கீடு விளம்பரம் 6—2—1991 அன்று வெளியிட்டது. 5,450 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதற்கான முதல் நிலைத் தேர்வு 23—6—1991-ல் நடத்தப்படும்.

**தொகுதி-2. பணிகள்**— 65,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதற்கான முதல் நிலைத் தேர்வு 24—6—1990இல் நடத்தப்பட்டது. முதல் நிலைத் தேர்வின் அடிப்படையில் 820 விண்ணப்பதாரர்கள் இறுதிநிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டு 22—2—1991 அன்று எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது.

எழுத்துத் தேர்வின் அடிப்படையில 164 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு ஜூன் மாதம் நடைபெற உள்ளது.

தொகுதி 3. பணிகள்—82,604 விண்ணப்பங்கள பெறப்பட்டன. முதல் நிலை தேர்வு 23—6—1990 அன்று நடைபெற்றது. 690 விண்ணப்பதாரர்கள் இறுதி நிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். அத்தேர்வு 28—12—1990 அன்று நடைபெற்றது. எழுத்துத் தேர்வின் அடிப்படையில் 138 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு ஜூன் மாதம் நடைபெற உள்ளது.

தொகுதி 5. பணிகள்— தேர்வாணையம் 12 காலியிடங்களுக்கு 15-10-1990 அன்று. அறிவிக்கை விளம்பரம் வெளியிட்டது. 8,741 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. முதல் நிலைத் தேர்வு 28-3-1991 அன்று நடத்தப்பட்டது.

தொகுதி 5-அ பணிகள். தமிழ்நாடு அரசு செயலகத்தில் உதவியாளர் பணிக்கு மற்ற துறைகளில் அமைச்சுப் பணியில் உள்ள இள நிலை உதவியாளர்களைக் கொண்டு நிரப்ப 66 காலி யிடங்களுக்கு 30-10-90 அன்று அறிவிக்கை விளம்பரம் வெளியிடப்பட்டது. 55 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. குறைந்த அளவு விண்ணப்பங்கள் பெறப்பட்டதால் வயது மற்றும் பணியின் கால அளவு விதிகளை தளர்த்துதல் சம்பந்தமாக அரசுக்கு எழுத திட்டமிடப்பட்டுள்ளது.

தொகுதி 7. பணிகள்— 5,028 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. அதற்கான முதல் நிலைத் தேர்வு 7-4-1990 அன்று நடைபெற்றது, 129 விண்ணப்பதாரர்கள் இறுதி நிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டு 23-3-1991 அன்று எழுத்துத் தேர்வு நடைபெற்றது. அதன் அடிப்படையில் 36 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு ஜூன் மாதம் நடைபெற உள்ளது.

தொகுதி 8. பணிகள் — 12,030 விண்ணப்பங்கள் பெறப்பட்டன. முதல் நிலைத் தேர்வு 31-3-1990 அன்று நடைபெற்றது. 300 விண்ணப்பதாரர்கள் இறுதி நிலைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். 28-10-1990 அன்று எழுத்துத் தேர்வு நடைபெற்றது. அதன் அடிப்படையில் 60 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். நேர்முகத் தேர்வு ஜூலை மாதம் நடைபெற உள்ளது.

தொகுதி 9. பணிகள்—3,709 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல்நிலைத் தேர்வு 8-4-1990 அன்று நடத்தப்பட்டது. 50 வேட்பாளர்கள் இறுதி நிலை எழுத்துத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டனர். இறுதி நிலை எழுத்துத் தேர்வு 6-5-1991 அன்று நடத்தப் பெற்றது.

தொகுதி 10. பணிகள்— 7 காலியிடங்களுக்கு 17-9-1990 அன்று அறிவிக்கை விளம்பரம் வெளியிடப்பட்டது. 8,516 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. முதல் நிலைத் தேர்வு 28-3-1991 அன்று நடத்தப் பெற்றது.

முதல் நிலைத் தேர்வுகள்.—7 வகைப் பணிகளில் 138 காலியிடங்களை நிரப்ப 7 முதல் நிலை தேர்வுகள் நடத்தப்பட்டன. 1,46,732 விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன.

இறுதி நிலை எழுத்துத் தேர்வு. —அறிக்கைக்குரிய ஆண்டில் 26 வகை பணிகளில் 1,528 காலியிடங்களை நிரப்புவதற்கு 26 இறுதி நிலை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 15,297 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர். 1990–1991-ம் ஆண்டில் நடந்த முதல் நிலை மற்றும் இறுதி நிலை தேர்வுகளின் விவரங்கள் பின் இணைப்பு 5இல் கொடுக்கப்பட்டுள்ளது.

தகுதியும், பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் இல்லாமை :

அறிக்கைக்குரிய ஆண்டில் உதவிப் பொறியாளர் (மின்னியல்)-4, கணக்கு அலுவலர் நிலை-III-1, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையில் ஆராய்ச்சி அலுவலர்-2 ஆகிய 7 காலியிடங்களுக்கு தகுதியும் பொருத்தமும் உடைய வேட்பாளர்கள் கிடைக்காமையால் அவை நிரப்பப்படவில்லை.

(ஆதி திராவிடர்/பழங்குடியினர் -6, பகிரங்கப் போட்டி— 1) இதன் விவரம் பின் இணைப்பு 6இல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி 3.

தேர்வாணையத்தின் அமர்வுகள்.—நடப்பு ஆண்டில் வழக்கமான அலுவல் பணி கூட்டங்களோடு 78 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் காலை மற்றும் மாலை என இரு அமர்வுகளாக அமைக்கப்பட்டு நடந்தன. அதிக பட்சமாக 4 குழுமங்கள் இயங்கின. மொத்தம் 511 கூட்டத் தொடர்கள் நடந்தன. நேர்முகத் தேர்வு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| குழுமம் | நாட்கள் | அமர்வுகள் இரண்டு | அமர்வுகள் ஒன்று | மொத்த அமர்வுகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 4 | 53 | 50(8) | 3(4) | 412 |
| 3 | 9 | 9(6) | 1(3) | 57 |
| 2 | 10 | 7(4) | 3(2) | 34 |
| 1 | 6 | 1(2) | 6(1) | 8 |
| மொத்தம் .. | 78 | | | 511 |

## பகுதி - 4.

(1) பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல்.

ஏப்ரல் 1, 1990 முதல் மார்ச் 31, 1991 வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் தேர்வாணையம் மாநிலப் பணிகளில் தொடர்புடைய சார்நிலைப் பணிகளிலிருந்து பணி மாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநிலப் பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்து குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 19 மாநிலப் பணிகளில் 735 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களை தெரிவு செய்தது. இதன் விவரம் பின் இணைப்பு 7-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ஒழுங்கு நடவடிக்கை, முறையீடுகள், மனுக்கள் முதலியன

| | |
|---|---|
| (1) செயல் நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (சென்ற ஆண்டு நிலுவையில் இருந்த 116 வழக்குகள் உட்பட) | 668 |
| (2) அ. தேர்வாணையம் கருத்து தெரிவித்த வழக்குகள் .. | 331 |
| ஆ. தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் .. | 61 |
| இ. விதிமுறைகள் பின்பற்றப்பட்ட பின்னர் மீள அனுப்புவதற்காக அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்ட வழக்குகள் | 156 |
| ஈ. ஆவணங்கள் அல்லது விவரங்களை அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள். | 119 |
| (3) வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்த வழக்குகள். | 21 |
| 1. அரசுக்கு தேர்வாணையத்தின் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்ட வழக்குகள். (கடந்த ஆண்டு நிலுவையில் இருந்த 194ஐ சேர்த்து) | 526 |

2. அரசு நடவடிக்கை எடுத்த வழக்குகள் .. .. .. 442

3. அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் 77

ஒழுங்கு நடவடிக்கை வழக்குகளில் காலச் செலவழிவு.

1. மொத்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. 449

| | மாதம் | நாட்கள். |
|---|---|---|
| 2. குற்றச்சாட்டுக் குறிப்பாணை அனுப்பிய நாளில் இருந்து தேர்வாணையத்திற்கு அதன் கருத்தைக் கோரி அரசு நிலையான கடிதம் அனுப்பிய நாள் வரை எடுத்துக் கொள்ளப்பட்ட சராசரி நேரம். | 10 | 6 |
| 3. தேர்வாணையம் அரசுக்கு தனது கருத்தைத் தெரிவிக்க எடுத்துக் கொண்ட சராசரி நேரம். | 6 | 10 |
| 4. தேர்வாணையம் தனது கருத்தை அனுப்பிய பிறகு ஆணை பிறப்பிக்க அரசு எடுத்துக் கொண்ட சராசரி நேரம். | 7 | 12 |
| 5. எடுத்துக் கொள்ளப்பட்ட மொத்த நேரம் .. | 23 | 28 |

மேல் முறையீடு மனு, மறு ஆய்வு மனு, ஒழுங்கு நடவடிக்கை ஒய்வூதியத்தில் பிடித்தம் செய்தல் அல்லது குறைப்பு, இவைகளில் அலுவலர்கள் தமது நேர்மைக்கு புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட வழக்குகளின் எண்ணிக்கை விவரம் ஆகியன பின் இணைப்பு 8இல் கொடுக்கப்பட்டுள்ளன.

3. சட்ட முறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை விதி 1954 இல் ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்டு 551 நிகழ்வுகள் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. 13 நிகழ்வுகளில் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுத்துள்ளது.

| வரிசை எண். | பணி வகை. | இசைவு அளிக்கப் பட்டவை. | இசைவு மறுக்கப் பட்டவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | மாநிலப்பணி .. .. .. | 58 | 1 |
| 2. | சார்நிலைப்பணி .. .. | 2 | .. |
| 3. | அமைச்சுப்பணி .. .. .. | 491 | 12 |
| | கூடுதல் .. .. | 551 | 13 |

எப்பணிகளில் எந்தெந்த பதவிகளுக்கு இசைவு அளிக்கப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது என்பதன் விவரங்கள் பின் இணைப்பு 9இல் கொடுக்கப்பட்டுள்ளது.

4. தற்காலிக நியமனங்கள்.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாநிலத்தின் பல்வகைப் பணிகளில் பல்வகைப் பதவிகளுக்கு 992 நபர்களை தற்காலிகமாக நியமனம் செய்து அந்நியமனங்கள் தொடர்வதற்குத் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது. 565 நபர்களின் தற்காலிக நியமனம் தொடர இசைவு மறுக்கப்பட்டது.

| காலம். | இசைவு அளிக்கப்பட்டது. | | இசைவு மறுக்கப்பட்டது. | |
|---|---|---|---|---|
| | மாநிலப் பணிகள். | சார்நிலை அமைச்சுப் பணிகள். | மாநிலப் பணிகள். | சார்நிலை அமைச்சுப் பணிகள். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 மாதங்களுக்குமேல் 12 மாதங்களுக்குள். | 39 | 251 | 10 | .. |
| 12 மாதங்களுக்குமேல் 18 மாதங்களுக்குள். | 16 | 127 | 55 | .. |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள். | 10 | 83 | 30 | .. |
| 24 மாதங்களுக்கு மேல் .. | 327 | 139 | 467 | 3 |
| கூடுதல் .. | 392 | 600 | 562 | 3 |

24 மாதங்களுக்கு மேலும் தற்காலிக நியமனங்கள் தொடர தேர்வாணையம் 466 நேர்வுகளில் இசைவு அளித்தமை குறித்த விவரங்கள் பின் இணைப்பு-10-ல் தரப்பட்டுள்ளது.

5. தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதி 20(ஏ) (3)-ன்படி ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்குத் தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எண்ணிக்கை 289 ஆகும்.

6. விதிகள் - பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:

அரசால் 274 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் 234 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 34 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணைய உள்ளீட்டெல்லைக்கு உட்படாதவையாகவோ, அல்லது இந்திய அரசியலமைப்பு சட்டப் பிரிவுக்கூறு 320 (3)-ன் படி தேர்வாணையத்தை கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல் :

அறிக்கைக்குரிய ஆண்டில் 99 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்டமுறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டது. 6 நேர்வுகளில் ஓய்வூதிய விதிகளைத் தளர்த்தியுள்ளது. அடிப்படை விதிகள் தமிழ்நாடு சிறப்பு ஊதியம், படி விதிகள் மற்றும் பயணப்படி விதிகள் ஆகியவற்றில் 25 நேர்வுகளில் விதிகளை தளர்த்தி ஆணையிட்டது. மேலும் 142 நேர்வுகளில் மதராஸ் பொது வருங்கால வைப்பு நிதி விதிகளை தளர்த்தி ஆணையிட்டது.

பகுதி-5-

தெரிவுத் தேர்வுகள் அல்லாத எழுத்துத் தேர்வுகள் :

(அ) சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் : 1990 ஆம் ஆண்டு மே மற்றும் நவம்பர் திங்களில் சிறப்பு மற்றும் துறைத் தேர்வுகள் நடைபெற்றது. 274 தேர்வுகள் நடத்தப்பட்டது. 93,539 நபர்கள் விண்ணப்பித்தனர். இதன் விவரம்

1990

| | சிறப்புத் தேர்வு | | துறைத் தேர்வு | |
|---|---|---|---|---|
| | மே | நவம்பர் | மே | நவம்பர் |
| 1. மொத்த பாடங்கள் | 27 | 27 | 53 | 50 |
| 2. தேர்வுத் தாள்களின் எண்ணிக்கை. | 30 | 30 | 109 | 105 |
| 3. விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை. | 20,605 | 18,141 | 27,570 | 27,223 |
| 4. மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்கள். | 21,010 | 19,339 | 29,053 | 22,906 |
| 5. தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை. | 10,928 | 11,617 | 14,422 | 10,495 |
| 6. தேர்ச்சி சதவீதம் | 52 | 60 | 47 | 50 |

ஆ. அரையாண்டுத் தேர்வுகள் : மாவட்ட உதவி ஆட்சியாளர் துணை ஆட்சியாளர், காவல் துறை அலுவலர் மற்றும் வனத்துறை அலுவலர் ஆகியோருக்கான அரையாண்டுத் தேர்வுகள் செப்டம்பர் மற்றும் மார்ச் 1991 இல் நடந்தன. இவற்றில் முறையே 45 மற்றும் 50 அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழைத் தாய் மொழியாக பெறாத அகில இந்திய பணியைச் சார்ந்த ஆட்சித்துறை காவல் துறை மற்றும் வனத்துறை அலுவலர்களுக்கான சிறப்புத் தமிழ் தேர்வு ஜூலை 1990 இல் விளம்பரப்படுத்தியதற்கு ஐந்து நபர்கள் விண்ணப்பித்தனர். எழுத்துத் தேர்வில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை.

இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக தேர்வாணையம் 1990 ஆகஸ்டு திங்களில் டேராடூனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு நடத்தியது. இதில் 73 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டதில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். 1991 பிப்ரவரி திங்களில் நடத்திய தேர்வில் 97 விண்ணப்பதாரர்கள் கலந்து கொண்டனர். இத்தேர்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

பகுதி - 6,

## சீர்திருத்தம் மற்றும் புதிய மாற்றங்கள்.

1. நேர்முகத் தேர்வில் தொகுதி பணியில் அனைத்து பதவிக்கும் ஒரே மதிப்பெண் வழங்குதல் :

நேர்முகத் தேர்வுகளில் தொகுதி பணியில் ஒவ்வொரு பதவிக்கும் தனித் தனியாக மதிப்பெண்கள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது அம்முறை மாற்றப்பட்டு அனைத்து பதவிகளுக்கும் ஒரே மதிப்பெண் வழங்கப்பட்டு பணி வேட்பாளர்கள் அவர் தம் படி நிலை மற்றும் பணி விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றனர்.

2. நேர்முகத் தேர்வின் மதிப்பெண் வழங்கும் முறையில் மாற்றம் :

தற்போது நேர்முகத் தேர்விற்கு மொத்த மதிப்பெண்களில் 12.2 சதவிதம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலும் அதிக மற்றும் குறைந்த மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்பட்டு அவ்வாறு வழங்கப்பெறும் ஏற்ற இறக்க எல்லை 10 அளவுத் தரங்களாக பகுக்கப்பட்டு விண்ணப்பதாரர்கள் ஏதேனும் ஒரு அளவுத் தரத்தில் நிர்ணயம் செய்யப்படுகின்றனர்.

3. நேர்முகந் தேர்வுக்கு விண்ணப்பதாரர்களை அனுமதித்தல். :

காலி இடம் எந்த ஒரு இன முறைக்கும் 4 அல்லது 4 இடங்களுக்கு குறைவாக இருந்தால் அனைத்து இன முறைக்கும் ஒரு இடத்திற்கு மூன்று நபர்கள் என்ற விகித முறையில் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்படுகின்றனர். காலியிடம் 5 அல்லது 5-க்கு அதிகமானால் ஒரு காலி இடத்திற்கு இரண்டு நபர்கள் என்ற விகித முறையில் அழைக்கப்படுகிறார்கள்.

4. விளம்பரத்துடன் விண்ணப்ப படிவம் வெளியிடல்: தற்போது தொகுதி பணிகளுக்குகான முதல் நிலைத் தேர்வு எழுத விழைவோருக்கான மாதிரி விண்ணப்ப படிவம் செய்தித்தாள் விளம்பரங்களில் தரப்படுகின்றன. இவை விளம்பரம் கொடுத்த அன்றே விண்ணப்பதாரர்களை சென்று அடைகின்றன.

5. விண்ணப்பங்களை வேலை செய்யும் அலுவலகம்/துறை மூலம் அனுப்புதலை தவிர்த்தல்:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் விளம்பரப்படுத்தப்படும் பதவிகளுக்கு நேரடியாக விண்ணப்பத்தை தேர்வாணையத்திற்கு அனுப்பினால் போதும். துறைத் தலைவர்களுக்கு விண்ணப்பித்துள்ள செய்தியினை தெரிவித்தால் போதுமானது. இறுதி நிலை எழுத்துத் தேர்வு அல்லது நேர்முகத் தேர்வுக்கு வரும்போது தடை இல்லாச் சான்றிதழ் அளித்தல் அவசியமானது.

6. புறவய வகை தேர்வுகள்.— முதல் நிலைத் தேர்வில் அனைத்து வினாக்களும் புறவய (Objective type) வகையை சார்ந்தவையாக இருக்கும்; மொத்த வினாக்கள் 200, 100 மதிப்பெண்கள், கால அளவு 2 மணி நேரம் என அமையும்.

7. பாடத்திட்டம் அமைத்தல்.— தேர்வாணையம் தன் போட்டித் தேர்வுகளுக்கான 172 பாடங்களுக்கு முது நிலை பட்டம், இளநிலைப் பட்டம், மேல் நிலைப் பள்ளி கல்வி மற்றும் பட்டயம் நிலை ஆகிய நான்கு கல்வித் தரங்களில் பாடத் திட்டத்தினை அமைத்துள்ளது. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்பத்துடன் பாடத்திட்டமும் வழங்கப்படுகிறது.

**8. பல பணிகளுக்கான கூட்டுத் தேர்வு முறை - அறிமுகம் :**

பல பதவி/பணிகள் ஒரே கல்வித் தகுதி உடையவையாக இருந்தால் அவைகளை ஒன்றாக சேர்த்து எழுத்துத் தேர்வு நடத்த தேர்வாணையம் முடிவெடுத்துள்ளது. சில தொகுதி பணிகளை ஒன்றிணைத்து ஒரே தேர்வு நடத்த அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இவ்வகையில் நுட்பம் சார் பணிகளில் சில கருத்து முன் மொழிவுகள் தேர்வாணையத்தின் பரிசீலனையில் உள்ளன.

**9. கணிப் பொறிபயன் :** தேர்வாணையத்தில் கணிப்பொறி அமைக்கப்பட்டு தேர்வுகளுக்கான அனுமதிச்சீட்டு தயாரித்தல், தேர்வு மையம், மற்றும் தேர்வுக் கூடங்களுக்கான ஒதுக்கீடு செய்தல், மதிப்பெண் பட்டியல், விண்ணப்பதாரர்களை தரமிடுதல் பல்வேறு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல் ஆகிய பணிகளுக்காக பயன் படுத்தப்படுகின்றது.

## பகுதி - 7

### தேர்வாணைய கருத்தை அரசு ஏற்காமை

**(அ) அரசு தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டமைக்கு சான்றுகள் :**

அரசு தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து அறிக்கை ஆண்டில் 14 வழக்குகளில் மாறுபட்டு செயல்பட்டுள்ளது. அரசின் இச்செய்கை, கொள்கை சம்பந்தப்பட்ட மற்றும் கட்டாயமான காரணங்களை உடைய நேர்வுகளைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் தேர்வாணைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கடைப்பிடிக்கப்பட்டு வரும் மரபினை மீறியதாகும். இப்பொருள் குறித்த ஐந்து ஆண்டு புள்ளி விவரம் பின் இணைப்பு11-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1. அரசாணை (பல்வகை) எண். 2038, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 28—10—87.

அரசு, 1985 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மதுரையிலுள்ள மருத்துவக் கல்லூரியின் முன்னாள் மருந்துகள் பயிற்றாசிரியர் ஒருவரை முன் அனுமதியின்றி 5—8—80 முதல் 4—11—84 வரை பணிக்கு வராமை குறித்து அவர்மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீதான தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலித்த பின், குற்றஞ்சாட்டப்பட்டவர் 5—11—84 முதல் மீண்டும் பணியில் சேர்ந்துவிட்டதால், அவர்மீது தண்டனை வழங்கும் அளவாக அவருடைய பணிமுதிர்ச்சியில் 10 இடங்களைக் குறைத்து நிர்ணயிக்கலாமென அரசுக்கு தேர்வாணையம் ஆலோசனை கூறியது. குற்றஞ்சாட்டப்பட்டவர் 25—2—85 முதல் மீண்டும் விடுப்பில் சென்றுவிட்டதாலும் அவர் 5—11—86 வரை விடுப்பு கோரியிருந்ததாலும் அரசு, 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த வழக்கின் மீதான தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினை தெரிவிக்கும்படி மீண்டும் கோரியபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான பின்னிட்ட தவறுகளுக்கு அவர்மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து அதன் மீதான அவருடைய விளக்கத்தினையும் பெற்று சம்பந்தப்பட்ட ஆவணங்களை, தேர்வாணையத்தின் கருத்தினை அனுப்பும் பொருட்டு, அனுப்பி வைக்கும்படி தேர்வாணையம் அரசுக்கு தெரிவித்தது. ஆனால், அரசு, குற்றம் சாட்டப்பட்டவர் 5—8—80 முதல் 4—11—84 வரை முன் அனுமதியின்றி பணிக்கு வராததும் அவரை பணியில் சேரும்படி பணித்தும் பணியில் சேராமல் மேற்படி ஆணையை உதாசீனப்படுத்தியதும் மிகவும் கடுமையான குற்றங்களாகக் கருதப்பட்டு மேற்படி குற்றங்களுக்கு ''பணிநீக்கம்'' (Removal from Service) தான் சரியான தண்டனை என்று கருதி, தேர்வாணையத்தின் கருத்துக்களிலிருந்து மாறுபட அரசு முடிவு செய்திருப்பதாகவும் கூறியுள்ளது. அதன்படி அரசாணை (பல்வகை) எண். 2038, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 28—10—87-ல் குற்றஞ்சாட்டப்பட்டவரை பணியிலிருந்து நீக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2. அரசாணை (பல்வகை) எண். 931, நல்வாழ்வு, இந்திய மருத்துவம், ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 14—6—1990.

ஜூலை 1979-ல் அரசு அனுமதியின்றியும் முறையாக விடுப்பும் பெறாமலும் தேர்வு ஒன்றினை எழுத பினாங்கு சென்றமைக்காக, ஒரு மருத்துவ அதிகாரியின் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின்மீது தேர்வாணைய கருத்துக்களைக் கோரியது. தேர்வாணையம், அவ்வொழுங்கு நடவடிக்கையின் மீது தனது கருத்தினைத் தெரிவிக்கையில் குற்றம் சாட்டப்பட்டவரின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபணமானாலும் ஒரு தேர்வினை எழுதுவதற்காக 20 நாட்கள் வெளிநாடு சென்ற ஒருவரையும் தன்னுடைய சுய லாபத்திற்காக வெளிநாட்டில் பணிபுரியும் பொருட்டு ஒரு சில ஆண்டுகளுக்கு வெளிநாடு செல்லும் ஒருவரையும் ஒப்பிடும்போது முதலில் கூறப்பட்டவர் குறைந்த தண்டனை பெற தகுதியுடையவராகுகிறார். எனவும், ஆகவே குற்றஞ்சாட்டப்பட்டவரைத் திருத்தி நல்வழி கொணரும் பொருட்டு அவருக்கு திரண்ட பயனுடன் கூடிய ஓராண்டு ஊதிய உயர்வு நிறுத்தத் தண்டனை வழங்கலாம் எனவும் ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு குற்றம் சாட்டப்பட்டவர், மேல் அதிகாரிகளை ஏமாற்றி வெளிநாடு செல்ல பயணம் வகுத்து அதனை நடைமுறைப்படுத்தியுள்ளார் எனவும், இம்மாதிரியான ஏமாற்றத் தனங்களில் ஈடுபடுபவரை சாதரணமாக கருதலாகாது எனவும், இம்மாதிரி தனது சுய லாபத்திற்காக, பொய்யான மருத்துவ சான்றிதழ்களைக் கொடுத்து மேல் அதிகாரிகளை ஏமாற்ற முயலும் அரசு ஊழியர்களை அரசுப் பணியில் தொடரவிடக்கூடாது எனவும், எனவே குற்றஞ் சாட்டப்பட்டவரை பணியிலிருந்து நீக்கம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளதாகத் தெரிவித்து, தேர்வாணைய கருத்துக்களுக்கு முரண்பட்டு, குற்றம் சாட்டப்பட்டவரை பணியிலிருந்து நீக்கம் செய்து ஆணை வெளியிட்டுள்ளது.

3. அரசாணை நிலை எண். 556 வேளாண்மை (வே. நி. 2.) துறை, நாள் 19-7-1990.

1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னாள் கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) ஒருவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. 3—1—82 முதல் 30—4 88 வரை தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் அன்னார் உதவி வேளாண்மை இயக்குநராக (எண்ணெய் வித்துக்கள்) பணியாற்றி வந்தார். அச்சமயத்தில் அன்னார் புரிந்த அநேக முறைகேடுகள் சம்பந்தமாக வரப்பெற்ற புகார்கள் மீது விசாரணை நடைபெற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வறிக்கையின் பேரில் முதலில் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் விதி 17(எ)-ன் படியும் பின்னர் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் விதி 17(பி) (பாகுபாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு)-ன் படியும் குற்றச் சாட்டுக்கள் சுமத்தி விளக்கங்கள் பெறப்பட்டன. அன்னாரிடமிருந்து விளக்கம் பெறப்பட்ட பின்னர் விசாரணை நடைபெற்று, சாட்டப்பட்ட குற்றச்சாட்டுக்கள் யாவும் நிருபணமானதாகக் குறிப்பிட்டு விசாரணை அலுவலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. நிரூபிக்கப்பட்ட குற்றங்கட்கு தண்டனையாக அவரது ஊதிய உயர்வினைத் திரண்ட பயனுடன் இரண்டாண்டுகட்கு நிறுத்தி வைக்கலாம் எனும் பரிந்துரையுடன் வேளாண்மை இயக்குநர் வழக்கினை அரசுக்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியதின்பேரில் தேர்வாணையம் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்து பின்னர் ஊதிய உயர்வினைத் திரண்ட பயனுடன் இரண்டாண்டுகட்கு நிறுத்தி வைக்கலாமென தேர்வாணையம் தனது கருத்தினை அரசுக்கு தெரிவித்தது. நிரூபணமான கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக குற்றச்சாட்டு அலுவலரை வேளாண்மை உதவி இயக்குநர் பதவியிலிருந்து கீழ் பதவிக்கு அதாவது வேளாண்மை அலுவலராக ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து (அதாவது 19-7-90, லிருந்து 20—7—90 வரை) இரண்டு நாட்களுக்கு பதவியிறக்கம் செய்து அரசாணை நிலை எண். 556 வேளாண்மை (வே.நி. 2) துறை, நாள் 19—7—90-ன் மூலம் ஆணையிடப்பட்டுள்ளது.

4. அரசாணை நிலை எண். 723 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நாள் 25—5—90.

குற்றச் சாட்டுகள் நிருபணம் செய்யப்பட்டு அதற்காக அரசால் வழங்கப்பட்ட திரண்ட பயனில்லாத இரண்டு வருட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை எதிர்த்து மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் அரசுக்கு செய்த மனுவின் மீதான தேர்வாணையத்தின் கருத்துக்களை 1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதத்தில் அரசு கோரியது. மேலதிகாரிகளின் எழுத்து வடிவ ஆணைகளை மதிக்காததற்கும் அலுவலக நண்பருடன் தேவையில்லாமல் வாய்வழி சண்டையிட்டதற்காகவும், பொறுப்பினை ஒப்படைக்கும் சான்றிதழில் முன் தேதியிட்டு கையொப்பமிட்டதற்காகவும் அரசுப் பணியாளர்களின் நன்னடத்தை விதிகட்கு புறம்பாக உயர் அதிகாரிகட்கு சுற்றறிக்கை கடிதம் அனுப்பி அதன் நகலொன்றினை அமைச்சருக்கு அனுப்பியதுடன் போராட்டங்களில் கலந்து கொள்ளும்படி அதிகாரிகளை தூண்டியதற்காகவும் மேற்படி தண்டனை அன்னாருக்கு வழங்கப்பட்டது.

வழக்கு சம்பந்தப்பட்ட பதிவுருக்களை கவனமுடன் ஆராய்ந்த தேர்வாணையம் தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் (பாகுபாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு), விதிகளின் விதி 17(பி)-ன் கீழ் நடவடிக்கை தொடரப்பட்ட இவ்வழக்கில், விதி 17(ஏ)-ன் கீழ்வரும் சிறு தண்டனை அளிக்கப்படுமுன், ஒரு காரணங்கேட்கும் தாக்கீது அனுப்பி, அதற்கான விளக்கத்தைப்பெற்று அதனைப் பரிசீலனை செய்து, இறுதி ஆணை பிறப்பிக்காமை இவ்வழக்கை வழுவுடைதாக்கும் என கருதி அவ்விதமே அரசுக்கு தெரிவித்து, அரசால் வழங்கப்பட்ட தண்டனை ஆணையை இரத்து செய்து வழு ஏற்பட்ட இடத்திலிருந்து நடவடிக்கை புதிதாக தொடரப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கியது. இவ்வழக்கில் விதிகளின்படி நேர்முக விசாரணையோ அல்லது நேரிடை கேட்பு முறையோ அவசியமாக தெரியவில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்ட, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரே அனைத்து குற்றச்சாட்டுக்களையும் புரிந்ததாக ஒப்புக்கொண்டு விட்டார் எனவும் கூறிய அரசு, தண்டனை ஆணை இரத்து செய்யப்பட வேண்டியதில்லை எனத் தெரிவித்து 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தேர்வாணையத்தின் கருத்துக்களை மீண்டும் அரசு கோரியது. வழக்கு சம்பந்தப்பட்ட பதிவுருக்களை மீண்டும் கவனமுடன் ஆராய்ந்த தேர்வாணையம் இதே போன்ற வேறு பல வழக்குகளில், இது போன்றே தொடர்ந்து அரசுக்கு தேர்வாணையத்தால் ஆலோசனைகள் வழங்கப்பட்டு, தேர்வாணையத்தின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாலும் அவ்விதமே ஆணைகள் வழங்கப்பட்டுள்ளமையால், இவ்வழக்கிலும் ஏற்கனவே ஜனவரி 1988-ல் அரசுக்கு தெரிவித்த அதே கருத்துக்களையே தேர்வாணையம் மீண்டும் வலியுறுத்தியது. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவர் தன்னை பாதுகாத்துக்

கொள்ள எல்லாவிதமான வாய்ப்புகளும் கொடுக்கப்பட்டு விட்டதாகவும், குற்றஞ் சாட்டப்பட்டவரே அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் தான் புரிந்ததாக ஒப்பு கொண்டுவிட்டதாலும் நடைமுறை குறைபாடு ஏதும் இல்லை எனத் தெரிவித்து, அரசால் முன்னர் வழங்கப்பட்ட தண்டனை ஆணை ரத்து செய்யப்பட வேண்டிய அவசியமில்லை எனக் கருதி தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு மனுதாரரின் மனுவினை நிராகரித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

5. அரசாணை நிலை எண். 1261 நல்வாழ்வு இந்திய மருத்துவம் ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை நாள் 10-7-1990

குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டு அதற்காக அரசால் வழங்கப்பட்ட திரண்ட பயனில்லாத மூன்று வருட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை எதிர்த்து, முன்னாள் மருத்துவம் சம்பந்தப்படாத மதுரை பல்கலைக் கழக விரிவுரையாளர் (மருத்துவ இயலில்) அரசுக்கு செய்த மறு ஆய்வு மனுவின் மீதான தேர்வாணையத்தின் கருத்துக்களை 1989 ஆம் வருடம் செப்டம்பர் மாதத்தில் அரசு கோரியது. மறு ஆய்வு மனுதாரர் தன்னிடத்தில் ஒப்படைக்கப் பட்ட பொறுப்பான பணிகளை சரிவர நிறைவேற்றவில்லை. என்றும் மேலும் மனுதாரர் நம்பிக்கை மற்றும் இரகசியத்தை கடைபிடித்து நடக்காததால் புகார்கள் இல்லாமல் தேர்வுகள் நடத்த இயலவில்லை என்ற காரணங்களுக்காக மேற்படி தண்டனை அன்னாருக்கு வழங்கப்பட்டது.

இவ்வழக்கு சம்பந்தப்பட்ட பதிவுருக்களை கவனமுடன் ஆராய்ந்த தேர் வாணையம் நிரூபணமான குற்றச்சாட்டிற்கு வழங்கப்பட்ட தண்டனை அதிகமான தல்ல எனக் கருதி மறு ஆய்வு மனுவை சாரமற்றதாகக் கருதி தள்ளுபடி செய்து தனது ஆலோசனையை அரசுக்கு வழங்கியது. ஆனால் அரசு இவ்வழக்கில் கனிவு நோக்குடன் முடிவு எடுத்து, மறு ஆய்வு மனுவை அனுமதித்து, ஏற்கனவே வழங்கப்பட்ட திரண்ட பயனில்லாத மூன்று வருட ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை ஆணையை ரத்து செய்து மறு ஆய்வு மனுதாரரை எச்சரித்து தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

6. அரசாணை எண். 1559, சுகாதாரம் நாள் 29-8-1990.

பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பல்கலைக் கழக விரிவுரையாளராகப் ( Reader ) பணிபுரியும் ஒருவரின் மீது, அவர் மீது மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கான தேர்வின்போது பாரபட்சமாக நடந்து கொண்டமைக்காகவும், மாணவர்களின் தோராய நோய் விவர குறிப்புகளில் ( case sheets ) தேவையற்ற, மதிப்பினைக் குறைக்கும் வகையிலும் சில, மகளிர் பதிவுப் புத்தகங்களில் ஆபாசமான குறிப்புகள் எழுதியமைக்காகவும், கடவுளுக்கு நிகரான அவருடைய அலுவலகப் பதவியை இவ்வாறு தவறாகப் பயன்படுத்தியமைக்காகவும், எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது அரசு ஜூலை 1989-ல் தேர்வாணைய கருத்துக்களைக் கோரியது. அப்போது தேர் வாணையம் குற்றம் சாட்டப்பட்டவர் வக்கிர புத்தியுள்ளவர் என்றும் அவர் மருத்துவராக அரசுப் பணியில் தொடர தகுதியற்றவர் என்றும் கருத்து தெரிவித்து, அவரை பணியறவு ( dismissal ) செய்யலாம் எனவும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு குற்றம் சாட்டப்பட்டவரின் நீண்ட கால பணியினைக் கருத்தில் கொண்டு, கருணை நோக்குடன் அவரது வழக்கை முடித்துக் கொள்ள கருதுவதாக கூறி, தேர்வாணைய கருத்திலிருந்து மாறுபட்டு அவரது ஊதிய உயர்வினை இரண்டாண்டு காலத்திற்குத் திரண்ட பயனுடன் நிறுத்தி வைத்து ஆணை வெளியிட்டது.

7. அரசாணை எண். 1132, தொழில் துறை, நாள் 15-10-1990.

தொழில் வணிகத்துறையைச் சேர்ந்த ஒரு துணை இயக்குநர் (தொழில் கூட்டுறவு) மீது, அவர் சென்னை-30-ல் உள்ள தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடு தயாரிப்பாளர்களின் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளராக இருந்த போது நிலக்கரியை இரு தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்த வகையில் செய்த முறைகேடுகளுக்காக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது அரசு மே 1985-ல் தேர்வாணையத்தின் கருத்துக்களைக் கோரியது. அப்போது தேர் வாணையம், குற்றம் சாட்டப்பட்டவர் மீது கூறப்பட்ட நான்கு குற்றச்சாட்டுக் கூறுகள் குற்றச்சாட்டு ஒன்று மட்டும் பகுதியாக நிரூபணமாவதாகவும், மற்ற குற்றச்சாட்டுக்கள் நிரூபணமாகவில்லை என்றும் தெரிவித்து அவருக்கு 'கண்டனம்' வழங்குமாறு ஆலோசனை கூறியது. எனினும் அரசு, குற்றச்சாட்டு இரண்டினைப் பொறுத்தமட்டிலும் தேர்வாணையத்தின் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதாகவும் மற்ற மூன்று குற்றச்சாட்டுக்களும் நிரூபணமாவதாகவும் கூறி, நிரூபணமான குற்றச்சாட்டுக்கள் கடுமையானவை என்றும், ஒரு கூட்டுறவு சங்கம் மற்றும்

அதன் உறுப்பினர்களின் நலனை பாதுகாப்பதற்கான நியமனம் செய்யப்பட்ட பொறுப்புள்ள அலுவலர், அச்சங்கம் மற்றும் அதன் உறுப்பினர்களின் நலனுக்கு மாறாக பணிபுரிந்துள்ளார். என்றும் தெரிவித்தது. தேர்வாணையத்தின் கருத்துக்களிலிருந்து மாறுபட்டு, அவரை அவர் வகிக்கும் பதவிக்கு அடுத்த கீழ் நிலை பதவிக்கு இரண்டாண்டுகளுக்கு, அவர் விடுப்பில் செல்லும் காலம் நீங்கலாக இறக்கி வைத்து ஆணை வெளியிடட்டது.

8. அரசாணை எண். 2522, போக்குவரத்து நாள் 11-6-1990.

மோட்டார் வாகன பராமரிப்புத் துறையைச் சேர்ந்த ஊனியங்கி பொறியாளர் ஒருவர் அத்துறையின் இயக்குநர், அவரை பணியில் சேரும்படி அறிவுறுத்தியும் அவர் பணியில் சேராமல் விடுப்பினைத் தொடர்ந்ததமைக்காக அவர் மீது எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்துக்களை டிசம்பர் 1988-ல் கோரியது. தேர்வாணையம் அந்நேர்வில், குற்றம் சாட்டப்பட்டவரின் விடுப்புக் காலம் நீண்ட காலத்திற்கானது அல்ல, எனவும், அவ்விடுப்பும் அவரது குடும்ப பிரச்சினைகளை காரணம் காட்டியே எடுத்துள்ளார் எனவும், அவர் விடுப்புக்கான காரணத்தையும் தனது கடிதத்தில் விளக்கி கூறியுள்ளார் எனவும் கூறி அவர் தனது பணியினை ராஜினாமா செய்துள்ள நிலையில் அவரது ராஜினாமாவை, அவர் மீது வேறெந்த ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லாத பட்சத்தில் ஏற்றுக் கொள்ளலாம் என பரிந்துரை செய்தது. ஆனால் அரசு, குற்றம் சாட்டப்பட்டவர் மீது, தேவையற்ற கழிவு பொருட்களை அகற்றுவதில் செய்த முறை கேடுகளுக்காகவும் வேறொரு நிகழ்வில் டெண்டர்களை முடிவு செய்வதில் புரிந்த முறை கேடுகளுக்காகவும் எடுக்கப்பட்ட இரு ஒழுங்கு நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளதாகவும் இவைகளைத் தவிர இதற்கு முன்னதாக அவர் தண்டனைகள் பெற்றுள்ளதாகவும், அவரது ராஜினாமாவிற்கு அவர் கூறியுள்ள காரணங்கள் நியாயமானவைகளாக இருந்தாலும், அலுவலக ஒழுங்கு முறைகள் அவரால் கடைபிடிக்கப்படவில்லை என்றும் இதற்காக அவர் கடுமையான தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்றும், தவறினால் அவர் அத்துறையைச் சேர்ந்த மற்றவர்களுக்கு ஒரு மோசமான முன் உதாரணமாக திகழ்வார் என்றும் கூறி, தேர்வாணையத்தின் கருத்துக்களிலிருந்து மாறுபட்டு அவரைப் பணியறவு செய்து ஆணை வெளியிட்டது.

9. அரசாணை எண். 2649, பொதுப்பணித்துறை, நாள் 10-12-1990.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், பொதுப்பணித்துறையில் பணியாற்றி வரும் ஒரு உதவிப் பொறியாளரின் மறு ஆய்வு மனு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. திருச்சிராப்பள்ளி பொதுப்பணித்துறை ஆராய்ச்சி வட்டத்தில் பணியாற்றிவந்த மனுதாரர் தமது சொந்த அலுவல்களை முன்னிட்டு முதலில் 3—10—1985, விடுப்பிற்காக விண்ணப்பித்து பின்னர் தமது விடுப்பினை 31—10—1986 வரை நீட்டித்தார். மனுதாரரின் விடுப்புக் காலம் ஆறுமாதங்கட்கு மேல் செல்லவே, அவர் எங்கிருக்கின்றார் என்ற விவரத்தினை அறிந்து தெரிவிக்கும்படி காவல் துறையிடம் கேட்கப்பட்டது. ஏப்ரல் 1986 முதல் அக்டோபர் 1986 வரை மனுதாரர் மஸ்கட்டிற்கு சென்றிருந்ததாக காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல், (குற்றப்புலனாய்) சென்னை-4 அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது... சென்னை வட்டார கடவுச்சீட்டு அலுவலரிடம் விசாரித்ததன் மூலம், மனுதாரர் வெளிநாட்டிற்குச் சென்று வர கடவுச்சீட்டு பெற்ற விவரம் தெரியவந்தது... கடவுச்சீட்டு பெற மனுசெய்கையில் மனுதாரர் தாம் ஒரு சிவில் எஞ்சினியர் (சொந்த வேலை) எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆவணங்களின்படி மனுதாரர் 8—2—1964-ல் பொதுப்பணித் துறையில் சேர்ந்து பொள்ளாச்சி வாய்க்கால் கோட்டத்தில் பணிபுரிந்திருக்கிறார். மேற்படி பணியாற்றிய விவரங்களை மறைத்தது தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் நடத்தை விதி 20-ஐ மீறியதாகும் எனக் குறிப்பிட்டு மனுதாரர் மீது தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் விதி 17 (பி)-ன் கீழ் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (பொது) மூன்று குற்றச்சாட்டுக்களை சுமத்தினார். மனுதாரர் தமது விளக்கத்தினை அளித்தார். ஒரு விசாரணை நடைபெற்றது. குற்றச்சாட்டுக்கள் 2 மற்றும் 3 ஆகியன நிரூபிக்கப்படுவதாகவும் முதற் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை யெனவும் குறிப்பிட்டு விசாரணை அலுவலர் தமது அறிக்கையினை அளித்துள்ளார். பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் (பொது) இவ்வழக்கினை அரசுக்கு அனுப்பிவைத்தார். வழக்கினை, சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் பரிசீலித்தபின் அனைத்து குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படுவதாகக் குறிப்பிட்டு மனுதாரரின் ஊதிய உயர்வினைத் திரண்ட பயனுடன் நான்சாண்டு காலத்திற்கு நிறுத்தி வைக்க அரசு ஆணையிட்டது. இதனை எதிர்த்து மனுதாரர் தமது மறு ஆய்வு மனுவினை அரசுக்கு அனுப்பினார். இவ்வழக்கின் மீது அரசு

தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியதின் பேரில் தேர்வாணையம் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர் திரண்ட பயனுடன் கூடிய நான்காண்டு கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனையை மாற்றி மனுதாரரின் ஓய்வூதிய பலன்களை பாதிக்காத வகையில் திரண்ட பயனற்ற நான்காண்டு கால ஊதிய உயர்வு நிறுத்த தண்டனை அளிக்கலாமென தேர்வாணையம் தனது கருத்தினை அரசுக்கு தெரிவித்தது. அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக தமது ஆணை எண். 2649, பொதுப்பணித்துறை நாள் 10—12—1990-ன் மூலம் மறுஆய்வு மனுவின் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

10 அரசாணை நிலை எண். 2056, குடும்பநலத்துறை நாள் 7-11-1989.

1986ஆம் ஆண்டு ஜூன் மாதம், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையில் கோயம்புத்தூர் தலைமை நீர் பகுப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் பணியாற்றி வந்த ஒரு அலுவலக உதவியாளரின் மேல்முறையீடு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. அலுவலக உதவியாளர் நீர் பகுப்பாய்வாளர் ஆய்வுக்கூடம், கிங் நிலையம், கிண்டியில் 1984-ல் பணியாற்றி வந்தபோது சுகாதாரம் மற்றும் நோய தடுப்பு மருந்து இயக்குநரின 17- 7- 1984 நாளிட்ட நடவடிக்கையின் மூலம் கோயம்புத்தூர் மண்டல நீர் பகுப்பாய்வாளர் அலுவலகத்திற்கு மாறுதல் உத்திரவு வழங்கப்பட்டு 31- 7— 1984 அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டார். அவ்வுத்திரவு 1—8—1984 அன்று மேலமுறையீட்டாளருக்கு அனுப்பி வைக்கப் பட்டது. ஆனால் மேல்முறையீட்டாளர் தன்னுடைய 31- 7— 1984 நாளிட்ட கடிதத்தில் 31—7—1984 முதல 9— 8—1984 வரையில் 10 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பு கேட்டுக் கொண்டு கோவை அலுவலகத்தில் பணியை ஏற்காமலிருந்து விட்டார். மேல் முறையீட்டாளர் தமது விடுப்பினை 2— 9— 1984 வரை நீட்டித்துவிட்டு பின்னர் 3— 9—1984 அன்று விடுப்பு முடிந்து புதிய இடத்தில் பணியில் சேராமலும் மற்றும் எவ்வித விடுப்பு விண்ணப்பமும் அனுப்பாமலும் இருந்தமையால் பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு இயக்குநரால் தமிழ் நாடு குடிமுறைப் பணிகள் விதி 17(பி)-ன் படி இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அதற்கான விளக்கம் கோரப்பட்டது. மேல்முறையீட்டாளர் பூர்த்தி செய்த வினாப்படிவத்துடன் தமது விளக்கத்தினை அளித்தார். ஒரு நேரடி விசாரணை நடைபெற்றுள்ளது மேல் முறையீட்டாளர் மீது சுமத்தப் பட்டுள்ள இரண்டு குற்றச்சாட்டுக்களும் நிரூபணமாவதாகக் குறிப்பிட்டு விசாரணை அலுவலர் தனது அறிக்கையினை அளித்துள்ளார். சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசிலித்த பின்பு இரண்டு குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப் படுவதாகக் குறிப்பிட்டு மேல் முறையீட்டாளரின் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி இரண்டாண்டுகட்கு நிறுத்தி வைத்து பொது சுகாதாரம் மற்றும், நோய்த்தடுப்பு இயக்குநர் ஆணையிட்டுள்ளார். இதனை எதிர்த்து, மேல் முறையீட்டாளர் தமது மேல்முறையீட்டினை அரசுக்கு அனுப்பி வைத்தார். இவ் வழக்கின் மீது அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியதன் பேரில், தேர்வாணையம் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர் மேல்முறையீட்டாளருக்கு தண்டனை வழங்கப்பட்ட ஆணையுடன் விசாரணை அறிக்கையின் நகல் அனுப்பப்படாத காரணத்தால் மேல்முறையீட்டாளர் மீது எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கை வழுவுள்ளதாகின்றது. எனவே மேல்முறையீட்டாளர் மீது புதிதாக ஒரு தண்டனை ஆணை பிறப்பித்து அத்துடன் விசாரணை அறிக்கையின் நகலினையும் அனுப்பி வைக்கும்படி தேர் வாணையம் ஆலோசனை வழங்கியது. பின்னர் அரசின் 12—9—1988 நாளிட்ட கடிதத்திற்கும் மேற்படி கருத்து வலியுறுத்தப்பட்டது. நிரூபணமான குற்றங் கட்கு அரசு தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக தமது ஆணை எண். 2056, சுகாதாரம் இந்திய மருத்துவம், ஓமியோபதி மற்றும் குடும்ப நலத்துறை நாள், 7—11—1989-ன் மூலம் மேல்முறையீட்டினை தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளது

11 அரசாணை எண். 2, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை, நாள் 2—1—1991.

பட்டு வளர்ச்சித் துறையினைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் ஒருவர், அவரை இளநிலை ஆய்வாளர் பதவிக்கு மூன்றாண்டுகளுக்குப் பதவியிறக்கம் செய்து ஆணையிட்ட இயக்குநரின் ஆணைக்கெதிராக, அரசுக்கு செய்து கொண்ட மேல் முறையீட்டின் மீது, தேர்வாணைய கருத்துக்களை அரசு கோரிய போது தேர் வாணையம், இந்நேர்வில் மேல் முறையீட்டாளர் மீது கூறப்பட்ட 9 குற்றச் சாட்டுக்களில் 6 குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள தாகக் கூறி, அவருக்கு வழங்கப்பட்ட தண்டனையை ஊர்ஜிதம் செய்யலாம். எனவே அவரது மேல் முறையீட்டினைத் தள்ளுபடி செய்யலாம் எனவும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது. எனினும் அரசு, நிரூபிக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களுக்காக, பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் வழங்கியுள்ள தண்டனை

கடுமையானது எனவும் ஓராண்டு கால பதவியிறக்க தண்டனையே போதுமானது எனவும் அரசு கருதுவதாகக் கூறி தேர்வாணையத்தின் ஆலோசனையிலிருந்து மாறுபட்டு, மேல் முறையீட்டாளருக்கு பட்டு வளர்ச்சித்துறை இயக்குநரால அளிக்கப்பட்ட மூன்றாண்டு கால பதவியிறக்க தண்டனையை ஓராண்டு கால, பதவியிறக்க தண்டனையாக மாற்றியமைத்து ஆணை வெளியிட்டது.

### 12. அரசாணை எண். 904, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11—10—1990.

1987-ம் ஆண்டு டிசம்பர் மாதம், செங்கோட்டையில் நகராட்சி ஆணையராக (தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்) பணியாற்றி வந்த மேல் முறையீட்டாளரின் மேல்முறையீடு சம்பந்தப்பட்ட ஆவணங்களை அனுப்பி வைத்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. மேல்முறையீட்டாளர் செங்கோட்டை நகராட்சி அலுவலராகப் பணியாற்றி வந்த போது நடைபெற்ற சில நிர்வாக முறைகேடுகள் கண்டறியப்பட்டு அன்னார்மீது தமிழ்நாடு குடிமுறைப் பணிகள் விதி 17(பி)-ன் கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநரால் நான்கு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அதற்கான விளக்கம் கோரப்பட்டது. பூர்த்தி செய்த வினாப்படிவத்துடன் தமது விளக்கத்தினை மேல் முறையீட்டாளர் அளித்துள்ளார். ஒரு நேர்கேட்பு விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னர் மேல் முறையீட்டாளர் தமது கூடுதல் விளக்கத்தினை அளித்துள்ளார். வழக்கு சம்பந்தப் பட்ட ஆவணங்களை பரிசீலித்தப் பின்னர் குற்றச்சாட்டுக்கள் 1, 3 மற்றும் 4 ஆகியன நிரூபிக்கப்படவில்லை எனவும் 2-வது குற்றச்சாட்டு மட்டும் நிரூபிக்கப் படுவதாகவும் குறிப்பிட்டு, நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டிற்கு தண்டனையாக, மேல்முறையீட்டாளரின் ஊதிய உயர்வினை திரண்ட பயனின்றி ஆறுமாதத்திற்கு நிறுத்தி வைத்து நகராட்சி நிர்வாக இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார். மேல்முறையீட்டாளர் 31—1—1987 அன்று பிற்பகல் பணியிலிருந்து ஓய்வு பெற விருந்ததால் மேற்படி தண்டனைக்கு ஈடான தொகையினை அரசுக் கணக்கில் செலுத்திவிடும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்கூறியபடி மேல்முறையீட்டாள ரால மேற்படி தொகை செலுத்தப்பட்டது. தண்டனை ஆணையினை எதிர்த்து தமது மேல்முறையீட்டினை மேல்முறையீட்டாளர் அரசுக்கு அனுப்பி வைத்தார். இவ்வழக்கு குறித்து அரசு தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியதன் பேரில், தேர்வாணையம் வழக்கு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் பரிசீலித்த பின்னர் நேரிடை வினவலுக்குப் பின் விசாரணை அலுவலரால் விசாரணை அறிக்கை தயாரிக்கப்படாததும் மற்றும் விசாரணை அறிக்கையின் நகல் இறுதி யாணையுடன் இணைத்தனுப்பாததும் இவ்வழக்கில் எடுக்கப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையினை வலுவுள்ளதாக்குகின்றது எனவும், தண்டனை ஆணையினை ரத்து செய்து தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின்கீழ் ஒழுங்கு நடவடிக்கையினைத் தொடரும்படியும் தேர்வாணையம் ஆலோசனை அளித்தது. இது குறித்து அரசு மீண்டும் தேர்வாணையத்தினை அணுகிய போதும் மேற்படி கருத்தே மீண்டும் வலியுறுத்தப்பட்டது. ஆனால், அரசு ஏற்கனவே ஒரு நேர்வில் தேர் வாணையம் வழங்கிய ஆலோசனையினை சுட்டிக்காட்டி, அந்நேர்வில் நடவடிக்கை விதி எண். 17(ஏ)-ன் கீழ் தொடரப்பட்டிருந்தாலும், வினாப்பட்டி அனுப்பிவை வைக்கப்பட்டு குற்ற அலுவலர் நேர்முக விசாரணையோ தனி விசாரணையோ, அல்லது இரண்டுமோ தேவையா என கேட்கப்பட்டிருந்ததால் விதி எண். 17(பி)-ல் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை எனக் குறிப்பிட்டு அந்நேர்வில் பிறப்பிக்கப்பட்ட இறுதி ஆணையை ரத்து செய்து ஓய்வூதிய விதி களின் கீழ் நடவடிக்கை தொடருமாறு அறிவுரை வழங்கியது. எனினும், பின்னர் அரசு அந்நேர்வில் நடவடிக்கை விதி எண். 17(ஏ)-ன் கீழ் தான் தொடரப் பட்டதாக தெரிவித்ததின் அடிப்படையில், தேர்வாணையம், அந்நேர்வில் விதி எண். 17(ஏ)-ல் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதாக ஏற்றுக் கொண்டது. அரசு சுட்டிக் காட்டிய நேர்வு இந்த நேர்வுக்கு மாறுபட்டது என்பது தெளிவாகும். இந்நேர்வில் தேர்வாணையம் வழங்கிய ஆலோசனை யிலிருந்து மாறுபட்டு அரசாணை எண். 904, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11—10—1990-ல் மேல்முறையீட்டாளரின் மேல் முறையீட்டினைத் தள்ளுபடி செய்து ஆணை வெளியிட்டது.

### 13. அரசாணை நிலை எண். 270 ஊரக வளர்ச்சித்துறை, நாள் 4-4-1990.

பிப்ரவரி 1989-ல் தமிழ்நாடு நகர பஞ்சாயத்து சார்நிலைப் பணியில் அடங்கிய ஊரக வளர்ச்சி துறையிலுள்ள செயல் அலுவலர், நிலை - 2 பதவிக்கு நேரடி நியமனம் மற்றும் மாறுதல் முறை நியமனம் செய்ய 1 : 3 என்ற விகிதத்தில் நிர்ணயித்து வரைவு திருத்தம் அடங்கிய ஆணையை அரசு ஊரக வளர்ச்சித்துறை, தேர்வாணையத்தின் கருத்துரைக்கு அனுப்பியது. ஆனால் தேர்வாணையம் அவ்விகிதத்தை 1 : 3-க்கு பதிலாக 1 : 2 ஆக மாற்று மாறு ஆலோசனை கூறியது.

ஆனால் அரசு ஆணை எண். 270, ஊரக வளர்ச்சி, நாள் 4—4—1990-ல் செயல் அலுவலர் நிலை-2 பதவிக்கு நேரடி நியமனம் மற்றும் மாறுதல் முறை நியமனம் மூலமாக பதவி நியமனம் செய்ய 1 : 3 என்ற விகிதத்தை நிர்ணயம் செய்து ஆணையிட்டது.

**14. அரசாணை எண். 1733, கல்வி, நாள் 28-12-1990.**

ஜூலை, 1989-ல் அரசு கல்வித்துறை 18 தற்காலிக முழுநேர இளநிலை பேராசிரியர்கள் மற்றும் 7 தற்காலிக பகுதி நேர இளநிலை பேராசிரியர்களின் தற்காலிகப் பணிகளை வரன்முறைப்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதி 1954-ல் விதி 16(பி)-யின் பிற்பகுதியின் கீழ் தேர்வாணையத்தின் இசைவினைக் கோரியது (பின்னர் 16 முழுநேர இளநிலை பேராசிரியர்கள் மற்றும் 6 பகுதிநேர இளநிலைபேராசிரியர்களுக்கு இசைவு தேவைப்படுவதாக சட்டக்கல்வி இயக்குநர் தெரிவித்தார்) அரசு கலைக் கல்லூரி களில் உதவிப் பேராசிரியர்கள் மற்றும் அரசு சட்டக் கல்லூரிகளில் சட்டமுன் படிப்பு உதவிப் பேராசிரியர்களுடைய பணிகள் வரன்முறை செய்யப்பட்டது போல அரசு சட்டக் கல்லூரிகளில் பணியாற்றும் தற்காலிக முழுநேர இளநிலை பேராசிரியர்கள் தங்களது பணிகளையும் வரன்முறைப்படுத்த வேண்டுமென முறையீடு செய்தார்கள் என்றும், சட்டக் கல்லூரிஇயக்குநரும் இக்கோரிக்கையை பரிந்துரை செய்துள்ளதாகவும் அரசு தெரிவித்தது. அக்கருத்துருவை தீர ஆய்ந்த தேர்வாணையம் முழுநேர இளநிலை பேராசிரியர்கள்/பகுதி நேர இளநிலை பேராசிரியர்கள் பதவிகளுக்கான தெரிவிற்கு விண்ணப்பித்திருந்த சில பணி வேட்பாளர்கள் தெரிந்தெடுக்கப்படவில்லையெனவும் மற்றும் சில பணி வேட்பாளர்கள் முழுநேர இளநிலை பேராசிரியர்கள்/பகுதி நேர இளநிலை பேராசிரியர்கள் பதவிகளுக்கு நியமனம் செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்ட போது அவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ள தவறிவிட்டனர் என்ற காரணங்களின் அடிப்படையில் தேர்வாணையம் தனது இசைவினை அளிக்க மறுத்தது. மேலும் இப்பதவிகள் தற்போது தேர்வாணையத்தின் உள்ளீட் டெல்லைக்குள்ளிருந்து விலக்கப்பட்டுவிட்டன என்று அரசுக்கு சுட்டிக் காட்டப் பட்டது. எனினும், அரசு தேர்வாணையத்தின் கருத்துக்கள் எப்படி இருந்த போதிலும் 14 இளநிலை பேராசிரியர்கள் (விரிவுரையாளர் முதுநிலை ஏற்றமுறை) என பதவி பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பணிகளை அரசாணை எண். 1733 கல்வி, நாள் 28—12—1990-ல் அரசாணை பிறப்பித்த நாள் முதல் வரன்முறை செய்து ஆணையிட்டது.

**ஆ. தேர்வாணையம் கலந்தோசிக்கப்படாமை சில சான்றுகளுள்.**

அரசு தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் 3 வழக்குகளில் அறிக்கைக் குரிய ஆண்டில் செயல்பட்டுள்ளது. அரசின் கொள்கை சம்பந்தப்பட்ட விவகாரங்கள் அல்லது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர பொதுவாக தேர்வாணையத்தின் ஆலோசனைகளை அரசு ஏற்றுக் கொள்ளும் என்ற மரபினை விட்டு விலகி, ஆணையிட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என தேர்வாணையம் நம்புகிறது.

**1. அரசாணை எண், 2167, பொதுப்பணித்துறை நாள் 29-12-1988.**

தமிழ்நாடு பொறியியற் சார்நிலைப் பணியில் பொதுப் பணித்துறையில் உள்ள நிலத்தடி நீர் பிரிவில் தற்காலிக சோதனை உதவியாளர் பதவிக்கு கல்வித் தகுதியை நிர்ணயம் செய்து அரசாணை எண். 2167, பொதுப் பணி, நாள் 29—12—1988-ல் தற்காலிக விதிகளுக்கு திருத்தம் வெளியிட்டது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவுக்கூறு 320(3)-ன் படி மேற்படி அரசாணையில் திருத்தம் வெளியிடுவதற்கு முன்னர் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் தேர்வாணையத்தை இவ்விஷயத்தில் கலந்தா லோசிக்கப்படவில்லை. மேற்படி திருத்தம் எந்தச் சூழ்நிலையில் தேர்வா ணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசினால் வெளியிடப்பட்டது என்பதைத் தெரிவிக்குமாறு கோரப்பட்டது. அதற்கு அரசு, மேற்படி அரசாணையிலுள்ள தற்காலிக விதிகளுக்கு திருத்தம் வெளியிடுவதற்கு முன்னர் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் விட்டது ஒரு கவனக் குறைவினால் ஏற்பட்ட தவறு என்றும் இத்தகைய விடுபாடுகள் இனியும் தொடராது எனவும் தெரிவித்தது.

**2. அரசாணை எண். 192, உள்துறை, நாள் 25—1—1990.**

தமிழ்நாடு போக்குவரத்து பணியிலடங்கிய வகை-2-ல் உள்ள பதவிகளில் ஐந்தில் ஒரு பகுதியை (3 உதவிப் பொறியாளர் இயக்கூர்திகள்) பதவிகளைத் தவிர்த்து நேர்முக உதவியாளர்களைக் கொண்டு நியமனம் செய்ய குறிப்பிட்டு ஒதுக்கப்பட வேண்டுமென அரசாணை எண். 192. உள்துறை நாள்

